# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்

தொகுதி – III




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் ஆர். மோகனதாஸ்

347. **முனைவர் மா. முத்துவிஜயலட்சுமி** 1675
அகநானூற்றுப் பாடல்கள் வெளிப்படுத்தும்
வாழ்வியல் நிலைகள்

348. **முனைவர் கா. சிவகாமி** 1680
சங்ககால மக்களின் வாழ்க்கை முறை - பாடுபொருள்

349. **முனைவர் சு. நாகரத்தினம்** 1686
பாரதியின் கண்ணன்

350. **முனைவர் ம. ஷீலா ஸ்ரீநிவாசன்** 1689
நம்மாழ்வாரின் திருவாசிரியம்

351. **பொன். கதிரேசன்** 1694
சிற்பியின் கவிதைகளில் பாடுபொருள் மாற்றங்கள்

352. **முனைவர் யாழ். சு. சந்திரா** 1699
தூது இலக்கியங்களில் காலந்தோறும்
பாடுபொருள் மாற்றம்

353. **முனைவர் க. பழனிவேல்** 1705
சங்க காலத்திற்குப் பின் பாடுபொருள் மாற்றங்களும்
விளைவுகளும்

354. **முனைவர் இரா. மணிமேகலை** 1710
வேறின்மை

355. **Dr. T. Muraleeswari** 1714
Anita Desai's *Clear Light of Day* explores the imagery
of Modern Women

356. **த. பிரியா** 1719
பனிபெய்யும் இரவுகள் புதினத்தில் மலையகத்
தோட்டத் தொழிலாளர்களின் நிலை

357. **முனைவர் ந. சண்முகவடிவு** 1723
இலக்கியங்களில் உயிர்

358. **முனைவர் சொ. சுரேஷ்** 1729
சங்க காலம் பொற்காலமா?

359. **எம். திருக்குமரன்** 1735
கருவாச்சி காவியத்தில் கிராமியப் பின்புலம்

360. **முனைவர் த. அஜி** 1741
பிரயோக விவேகத்தில் பாடுபொருள் தன்மைகள்

361. **முனைவர் ப. பத்மாவதி** 1747
காலந்தோறும் பெண்களின் நிலை

# 354. வேறின்மை



**முனைவர் இரா. மணிமேகலை**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோவை - 641 029.

***"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"***

உலகின் ஒவ்வொரு பொருளையும் சிறப்பாகவும் பொதுவாகவும் அறிய வேண்டியுள்ளது. பொதுவாக அறிதல் என்பது ஆராய்ச்சி அளவில் பொருளியல்பை அறிந்து கொள்ளுதல். சிறப்பாக அறிதல் என்பது ஆராய்ந்தவற்றை அனுபவமாக உணர்ந்து கொள்ளுதலாகும். இறை, உயிர், தளை என்ற முப்பொருள் இயல்பை உலகில் உள்ள பல்வேறு சமயங்கள் பலவிதமாக, விளக்கியுள்ளன. இறைக்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பை தத்துவங்கள் விவரிக்கின்றன. இந்திய நாட்டில் தோன்றிய சமயங்களை வைதிகம், அவைதிகம் என இரு பிரிவாகப் பிரிக்கலாம். வைதிக சமயங்களையும் இறை உண்மையை ஏற்றுக் கொள்வன, அதனை ஏற்றுக் கொள்ளாதன என இருவகையாகப் பிரிக்கலாம். இறைவன் உண்டு என்று ஏற்றுக் கொள்ளும் சமயங்களின் தத்துவங்களும் மாறுபடுகின்றன. இறை மட்டுமே உண்டு, அதாவது பொருள் ஒன்றுதான் எனக் கூறும் சமயம், இறை என்னும் ஒரு பொருள் உண்டு இதனுடன் உயிர்கள் உள்ளன; உலகமும் உள்ளது என்று பல பொருள்கள் உண்டு எனக்கூறும் சமயம் என இருவகையாகப் பிரிக்கலாம். இதனை ஏகான்மவாதம், அநேகாந்தவாதம் என்றும் கூறலாம். உயிர்களுடன் இறைவன் கலந்துள்ள நிலையைக் குறித்துப் பல்வேறு கால கட்டங்களில் கவிஞர்களும் தத்துவவாதிகளும் விவாதித்துள்ளனர்.

'சிந்தனைக்கரிய சிவமே போற்றி' என்றே திருவாசகம் இறை இருப்பை நவில்கின்றது. தமிழ் இலக்கணத்தில் பொருள் இலக்கணம் கருப்பொருளில் தெய்வத்தை முதன்மையாக அமைக்கின்றது. அறிவின் படிநிலையில் உயிர்களைப் பிரிக்கின்றது. ஐம்பூதங்களின் கலவையாய் அமைந்த உலகின் படைப்பை வியக்கின்றது. 'கந்துடைநிலை' என்ற பகுதியை விளக்கும் போது கந்து 'தெய்வம் உறையும் தறி' (நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் பொருளதிகாரம் - புறத்திணையியல்) என்று எங்கும் கலந்து நிற்கும் இறையியல்பைப் புலப்படுத்துகிறார். எல்லாப்பொருளிலும் எப்பெயரிலும் இயங்கி நிற்கும் தன்மையை,

***"ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்***